Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஹு (1889) ஆனை மீ 28உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது — தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசூ] யாழ்ப்பாணம்:- குரோதிஹு கார்த்திகைமீ கஉஉ வெள்ளிக்கிழமை (27 November. 1964) [இல-நடசு]

# நாவலருக்குச் சிலை நாட்டுவோம்

## அஞ்சா நெஞ்சம் படைத்த தனிவீரர்

[தமிழ்ப்பண்டிதர்: வ. மு. இரத்தினேஸ்வர ஐயர் அவர்கள்]

இப்பூவுலகில் மக்கட்பிறப்புப் போலச் சிறந்தது ஒன்றுமில்லை, மக்களும் அறிவினால் மேம்பாடுடையர். அவ்வறிவும் கல்வியினாலே விளக்கமடையும் கல்வியும் கடவுளின் இலக்கணம் ஆன்ம இலக்கணம், பாச இலக்கணம் என்பவற்றை உள்ளவாறு அறியச் சாதனமாக இருத்தல் வேண்டும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய அடைதலே நூற்பயன் என்பர் உலகமோ மிகப் பரந்தது கண்டங்கள், தேசங்கள் என்றெல்லாம் காணப்படும். நாம் வசிப்பது தமிழகம்; வடவேங்கடந்தென் குமரியாயிடைத் தமிழ்கூறுமிடமாகும். நமது யாழ்நகரும் தமிழகமே. இந்நகரில் பழமைவாய்ந்த மக்கள் தமிழர்களே. அத் தமிழ் மக்களின் புராதன சமயம் சைவ சமயமேயாகும். அந்நிய நாட்டிலிருந்து கப்பலில் ஒரு சமயம் வந்திறங்கியது. மக்களை அஞ்ஞானிகள் என்று அழைக்க அச்சமயிகள் தலைப்பட்டனர். இக்காலம் பரம்பொருளாகிய சிவபிரான் திருவருளால் 1822-ல் ஒரு சற்புத்திர சிரோரத்தினம் காணப்பட்டது. அதன் ஒளி கல்விச்சாணையால் அழுத்தப்பட்டு உலகினை விளங்கக் காட்டியது புதிய இல்லம், பெண்டு பிள்ளை ஆதியன இருந்தால் போதும் என்பதே மக்களின் முழுச் சித்தாந்தம். ஆனால், ஆறுமுகப்பெருமான் அருள்பொழிய ஆறுமுகம் என்ற அவ்விரத்தினம் சித்தாந்த வேதாந்தப் பெருநூல்களையும்பேரிலக்கண இலக்கிய சாகரங்களையும் நீந்திப் பரசமய கோளரியாகத் திகழ்ந்தது. இரத்தினம் என்றவுடன் கல்தானே என்று கருதிவிடாதீர்கள். நாகரத்தினம் போன்றவை சீவரத்தினம் என்று கேள்விப்பட்டிருப்பீர்களே! நமது ஆறுமுகமோ நமது மனித சமூகத்திற்கு ஆன்ம ஆறுதலளிக்க முற்பட்டார் கல்வியாலே மக்களை முன்னேற்றமடையச் செய்யலாம் என்று அப்பெரியாருடைய தூய உள்ளத்துத் தோன்றியது தமிழருக்கும் பிரசங்கஞ் செய்யத் தெரியுமா என்ற ஒரு சந்தேகம் ஆறுமுகக் கலாமேகத்தினால் அகன்றது. சூற்கொண்ட கொண்டல் பொழி பெருமழை நிகர்ப பிரசங்கமாமாரி பொழிய அவ்வாறுமுகவானத்தை யாவரும் போற்றினர். பரசமய திமிர பானுவாக ஆறுமுகம் விளங்கியது. சோழகக்காற்று வீசவே வடதிசையை அம்மேகம் நோக்கிச் சென்று வேதாரணியேசுவரப் பெருமானின ஆலய கோபுரத்திற படிந்து அன்புச் சொன்மாரி பொழிந்து தமிழகம் செழிக்கச் செய்தது. திருவாவடுதுறையில் சமய அரசு வீற்றிருந்த சுவாமிகள் செந்தமிழாகிய பொன்மழை ஆங்கே பொழிதலைக் கண்டு கேட்டு ஆறுமுகனாரை அழைத்து "நாவலர்" என்ற உயரபிதானத்தைச் சூட்டினர். ஆனால் "அவர்களுக்குத்தானே பட்டம் நம்மளுக்கென்ன" என்பார் பலராயினர். நமது சமயம் எது? மொழி எது? என்ற விசாரம் இன்றி "உண்டதும் உடுத்ததும் போதும்" என்ற நினைவுடையார் மத்தியில் யார் நாவலரை நினைக்கின்றார்கள்? குருபூசை ஆண்டுக்கொருமுறை நடந்து சிலரின் சொற்பொழிவுகளோடு காலம் கழிந்துவிடும். அவருடைய நூற்ருண்டுவிழா இன்றும் நூருண்டாக நடக்கிறது உருவச்சிலையும் இனித்தாபனமாகுமாம். சிற்க நாவலர் அளித்த கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடற்புராணம என்பன. சிவபிரானின் மூன்றகண்போன்ற செம்பொருள் காண்டற்குரிய சித்தாந்த சாத்திரங்களும், தேவாராதி திருமுறைகளும் சைவசமயிகளின் இனப வாழ்க்கைக்குரிய சிறந்த சாதனங்களாயுள்ளன. சங்க லகள் இங்கித அறிவையும், பண்டைக்கால ஒழுக்க வழக்கச் செவ்விகளையும அறியத் துணையாக நிலவுகின்றன கையிற்கிடைத்த பொருளை எறிந்துவிட்டு அரிப்பரித்துத் தேட முற்படல் நவீனந்தான்! ஆ! சமய ஒழுக்கம் மறைந்துவிட்டதே! ஆறுமுக நாவலராகிய தனிவீரர் இனி எப்போது வருவாரோ! அவர் போன்றார் ஒருவர் ஆறுவது சமயகுரவராக வரவேண்டும் அதற்கு முன் நாவலரவர்களின் ஒரு சைவவினுவிடையையேனும வாலிப பாலியச் செல்வச் சிறுர்களுக்குக் கற்பியுங்கள்! உலகத்துக்குக் கர்த்தா யாவர்? சிவபிரான் இதிலிருந்து புண்ணிய பாவ விளக்கங்களையும் படித்தாலே தமிழ்மக்கள் மேலான ஆக்கம் பெறலாம்?

"நல்லைநக ராறுமுக
நாவலர் வந்திலரேல்,
நீறெங்கே மாமறை
நூறு னெங்கே"

என்று ...

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

### நற்சிந்தனை

ஒருவ னாலே உலகம் உதித்தது
ஒருவ னாலே உலகம் நிலைத்தது
ஒருவ னாலே உலகம் ஒடுங்கிடும்
ஒருவ னேயென் உயிர்த்துணை
யாமே.



## "நாவலருக்கு நாம் செய்ய வேண்டியவை"

[முதலியார் திரு. செ. முத்துத்தம்பி அவர்கள்]

"நாவலர் பிறந்த இடம் யாழ்ப்பாணம். இந்த இடத்திற்குக் காலெடுத்து வைக்க அஞ்சுகிறேன். நானெங்கு சென்றாலும் அவருடைய நூல்களை எடுத்துச் செல்கிறேன்". இவ்வாறு நாவலர் பெருமையைப் பழனி ஈசான சிவாச்சாரியார் அவர்கள் நாவலர் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார், இவரைத் தவிர நாவலர்பெருமையை வேறு யார் இப்படி எடுத்துச் சொல்லமுடியும.

இன்னும்

"நல்லைநக ராறுமுக நாவலர்பி
றந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே
சுருதியெங்கே—யெல்லவரு
மேத்துபுரா ணாகமங்க
ளெங்கேப்ர சங்கமெங்கே
யாத்தனறி வெங்கே யறை".

என நாவலர் சிவபதமடைந்தபொழுது சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் இரங்கிப் பாடினார்கள். அவர் கூறுவது உண்மைதான்? எங்கள் நாவலர் தோன்றாவிட்டால் எங்கள் சமயம எங்கள் மொழியெல்லாம் பாதுகாப்பில்லாமல் அழிந்துவிடுந்தான். எனவே சமயம் வாழ, மொழிவாழத் தொண்டு செய்த எங்கள் நாவலர் பேர்வாழ நாம் செய்ய வேண்டியவை யாவை? இவைகளை யாராவது எண்ணியதுண்டா? இதோ அவை:

1. நாவலர் பெருமான் ஆதியில் குடியிருந்த வீடு முழுவதும் பழுதடைந்து, ஒரு சுவர் மாத்திரம்தப்பியிருக்கிறது. அந்தவிடத்தில் அவருக்குக் கோவில் கட்டி, அவரின் திருவுருவச்சிலையைப் பிரதிட்டைசெய்து பூசை, விழா நடக்க ஒழுங்கு செய்தல் வேண்டும்.

2 அவருக்கு யாழ்ப்பாணத்திலே சென்னையிலே சிதம்பரத்திலே

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

### ஆறுமுகநாவலனே போற்றி!

( அளவையூர் — சஞ்சீவி )

செந்தமிழ்த்தாய் அணைக்கின்ற செல்வா போற்றி
சிவம்பூக்கும் தவம்பூத்த தேவா போற்றி
வந்தபுற மதமறுக்கும் மன்னு போற்றி
மாண்புபெறு சைவநெறி வளர்த்தாய் போற்றி
முந்துநல்லூர் அவதரித்த முனிவா போற்றி
முத்திக்கு வழிகாட்டும் முதல்வா போற்றி
அந்தமிழ்சீர் அருள்நூல்கள் அளித்தாய் போற்றி
ஆறுமுக நாவலனே போற்றி போற்றி.

### பேச்சுப் போட்டியில் இடம்பெற்றுள்ளார்

தொல்புரம் மத்திய சனசமூக நிலைய வாசிகசாலையைச் சேர்ந்த செல்வி திலகவதி - தர்மபாலன் கடந்த ஞாயிற்றுக்கிழமை (22 - 11 - 64) வண்ணார்பண்ணை நாவலர் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில், கொழும்பு விவேகானந்த சபையாரால் நடாத்தப்பட்ட சுப்பிரமணிய பாரதியார் நினைவுப் பேச்சு வன்மைப்போட்டியில் யாழ்ப்பாண மாவட்டப் பூர்வாங்க தேர்வின்போது இரண்டாம் இடத்தைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார் என நிலையக் காரியதரிசி திரு. சி, வரதராசா அறிவித்துள்ளார்

கொழும்பு விவேகானந்த சபையினர், சபை மண்டபத்தில் 28-11-64-ல் நடாத்தும் சுப்பிரமணிய பாரதியார் இறுதித் தேர்வுப் போட்டியிலும் செல்வி திலகவதியைப் பங்குபற்றுமாறு அழைத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

குரோதி ஹு கார்த்திகை மீ கஉ உ வெள்ளிக்கிழமை


## வடமாகாணத்தில் மரவரி

வடமாகாணத்தில் மரவரி நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டபொழுது 'தீமைக்குக் காரணம் மரவரியே' என்ற ஒரு தலையங்கம் 12-1 -1938-ல் அன்று இப்பத்திரிகையில் பிரசுரஞ் செய்துள்ளோம். அதே பிரசுரத்தில் மரவரி முறை தொடங்கிய அக்காலம் பெருந் தீமைகட்கு உரிய காலமெனப் பல ஏதுக்களை எடுத்துக்காட்டிக்கனம் J.S மேதர் அவர்கள் கொழும்பி லிருந்து வெளிவந்த தினசரி ஆங்கிலப் பத்திரிகையொன்றில் வெளியிட்ட ஒரு கட்டுரையும் தமிழில் மொழிபெயர்த்துப் பிரசுரஞ் செய்யப்பட்டது.

சேர். அம்பலவாணர் கனகசபை என்னும் பெரியார் கனம் J. S. மேதர் அவர்களிடம் மதுபான நீககம் சம்பந்தமாகக் கூறிய உருக்கமான செய்தி மேற்படி கட்டுரையில் காட்டப்பட்டிருக்கின்றது. "நான் சைவசமயியென்ற முறையிற் சொல்லுகின்றேன். கேளுங்கள்; கள் சாராயத் தவறணைகளுள் ஒன்றைத் தானும் எங்கள் ஊரில் இல்லாமற் செய்த உங்களுக்கு 100 அன்ன சத்திரம் கட்டுவித்த புண்ணியம் கிடைக்கும்" மரவரி கொண்டுவரப்படு முன் நமது நாட்டில் கனம் J. S. மேதர், திரு. V. முத்துக்குமாரு, திரு. M. S. இளையதம்பி, கலைப்புலவர் நவரத்தினம், திரு. T. N. சுப்பையா முதலியோர்கள் கள் சாராயத் தவறணைகளை நீக்கப் பெரும் முயற்சியெடுத்து வெற்றி பெற்றனர். அதன் பின்பு சில விபரீதவுணர்ச்சி படைத்த மக்களின் முயற்சியினுலே மரவரி கொண்டுவரப்பட்டது. கள்ளுத்தவறணைகள் உள்ள காலத்தில் அவை யமைக்கப்பட வேண்டிய இடம் சட்டப்படி வரையறுக்கப்பட்டிருக்கும். கள் விற்பனை செய்யும் நேரமும் குறிக்கப்பட்டிருக்கும். மரவரி முறையின் பின் கள் விற்கும் கொட்டில்கள் எங்கும் அமைக்கலாம். கள்ளை எந்நேரமும் விற்பனை செய்யலாம். இவ்வித முறைகளினுல் கள் அருந்துவோர் தொகை அதிகரிக்கத் தொடங்கியது. அது இப்பொழுது வடமாகாணத்தில் நிலைத்துவிட்டது. மக்கள் ஏகமனதாகத் தங்கள் எதிர்ப்பை அரசாங்கத்துக்குத் தெரிவித்து அதனை நீக்கவில்லை. பாராளுமன்றத் தமிழ் அங்கத்தவர் பலரும் மரவரியை எதிர்த்தால் கள் சேர்த்து விற்பனை செய்யும் மக்களது வாக்குகளைத் தாங்கள் இழக்கநேரிடுமென அஞ்சி, அதனை எதிர்க்கின்றார்களில்லை.

இப்பொழுது நடைமுறையிலிருக்கும் கூட்டரசாங்கம் தென் இலங்கையில மரவரியைக் கொண்டு வருதற்கு ஓர் தீர்மானஞ் செய்தது. அங்கு அதனைப் பௌத்த குருமாரும், பௌத்த சங்கங்களும், பொதுமக்களும் பலமாக ஆட்சேபித்தனர். அவர்களுடைய ஆட்சேபனையைக் கவனித்து அரசாங்கம மரவரியை அங்கு கொண்டுவருதலை நிறுத்திவிட்டது. மரவரியினுல தென்னை நிற்கும் இடம் ஒவ்வொன்றும் கள் வியாபாரத் தலமாகுமெனவும் மக்களுக்குள் கள்ளருந்தும் தீய பழக்கம் பெருகுமெனவும், அதனுல் நாட்டில் கொலை, களவு முதலிய தீமைகள் அதிகரிக்குமெனவும் கூறி எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. தென் இலங்கையிலுள்ள மக்கள் இவ்விஷயத்தில் மகத்தான வெற்றியைப் பெற்றனர்.

வடமாகாணத்தில் மரவரியை நிற்பாட்ட அரசாங்கம் தாமாகமுன் வராது. அதனை நிற்பாட்டும கடமை நமது மக்களிலேயே தங்கியிருக்கின்றது. ஒரு நாடு சிறக்க வேண்டுமானுல முதலில் அந்நாட்டு மக்கள் அறிவு ஒழுக்கம் படைத்தவர்களாகத் திகழ வேண்டும். கள் அவற்றைக் கெடுக்கும் பொருளாக விருக்கின்றதென்பதை நமது மக்கள் உணர்ந்து, நாட்டின் நலனுக்காக மரவரியை நிறுத்த முயற்சி செய்ய வேண்டும், நமது நாட்டிலுள்ள சமயத் தலைவர்களும், சமயச்சங்கங்களும, பாராளுமன்றப் பிரதிநிதிகளும மரவரியினுல நமது நாட்டுக்குப் பல தீமைகள் விளைகின்றன வென்பதை அரசாங்கத்துக்கு எடுத்துக் காட்டி அதனை நீக்க முயற்சியெடுக்க வேண்டும். தென் இலங்கையிலுள்ள மக்களுடைய முயற்சி இவ்விஷயத்தில் எங்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும். ——

## 'கந்தசுவாமி' என்ற நாமத்தையிட்டு ஒரு விபரீத விளக்கம்

மட்டக்களப்பில் ஒருவர் முருகக்கடவுள் வணக்கத்தைப்பற்றித் தாம் எழுதிய நூலில விபரீதமான கருத்துக்களை வெளியிட்டனராம். அலெக்சாண்டர் என்ற கிரேக்க சக்கரவர்த்தி இந்தியாவைக் கைப்பற்றப் படையெடுத்த பின்புதான் அவ்வழிபாடு பாரதநாட்டில் ஆரம்பித்ததெனவும் 'அலெக்சாண்டர்' என்ற பெயர் மருவி 'ஸ்கந்தர்' என்றாய் கந்தக் கடவுளைக் குறிக்க நேர்ந்ததெனவும், தமது விபரீத ஆராய்ச்சியின் திறமையைக் காண்பித்திருக்கின்றனராம். நமது நாட்டில் முருகன் வழிபாடு மிகவும் தொன்மையானது.

அலெச்சாண்டருடைய படையெடுப்புக்கு முன் வெளிவந்த வேதசாத்திரங்களிலும், சங்க நூல்களிலும் முருகனைப்பற்றிய உண்மைகள் காணப்படுகின்றன.

'பெம்மான் முருகன் பிறவான் இறவான்' என அருணகிரிநாதர் கூறியிருக்கிறனர், சிவபெருமானும் முருகக்கடவுளும அபேதமானவர்கள். சிவபெருமானுடைய அருளே முருகன்.

"ஆதலினமது சத்தியறுமுகன
வனும யாமும்
பேதகம றனம்போற் பிரிவிலன
யாண்டே நின்ரு
னேதமில் குழவிபோல்வான்
யாவையு முணர்ந்தான்
போதமு மழிவிலவீடும் போற்
றினர்க் கருள வல்லான்.
- கந்தபுராணம்.

எனச் சிவபெருமான் உமாதேவியாருக்கு முருகக்கடவுளின் மகிமையைக் கூறுகின்றனர். அருவமாகவும் உருவமாகவும பலவாகவும் ஒன்ருகவுமுள்ள பிரமமே ஆறு திருமுகங்களுடன ஆன்மாக்களை ஈடேற்றும் பொருட்டுக் கந்தசுவாமியாகத் தோன்றினர். அவர் ஞானமே வடிவானவர்; அவருடைய இயல்புகளைப் பசுகரணம் நீங்கிச் சிவகரணம் படைத்தவர்களே ஒரு சிறிதறிவர். முக்குணவயப்பட்ட சிற்றறிவினையுடைய மக்கள் அவர் பெருமையை எவ்வாறறிய முடியும். ஊழிக்காலஞ் சென்ருலும அவர்கள் அறியமாட்டார்கள்,

சிவபெருமானுடையநெற்றிக் கண்களில் நின்றும் தோன்றிய ஆறு அக்கினிப் பொறிகளும, சரவணப்பொய்கையுள் ஆறு குழந்தைகளாக உற்பவித்துக் கார்த்திகைப் பெண்கள் அறுவருடைய திருமுலைப்பாலையுண்டு விளையாடிக் கொண்டிருக்கும பொழுது. உமாதேவியார் அவ்வாறு குழந்தைகளையும ஒன்ருகச் சேர்த்தனர். ஒரு உடம்பும், ஆறு முகங்களும் உள்ள ஒரு திருவுருவத்துடன் முருகப் பெருமான் தோன்றினர். ஒன்றுசேர்க்கப்பட்ட [illegible] ஒருவன் (சேர்க்கப்பட்டவன்) என்றழைத்தனர். கந்தர் என்ற நாமம் கந்தசுவாமியிலிருந்து தோன்றினதேயன்றி 'அலெச்சாண்டர்' என்ற நாமத்திலிருந்து தோன்றவில்லையென்பதை முற கூறிய நூலாசிரியர் அறிந்துகொள்வாராக. நரி வாலைக கொண்டு கடல் ஆழம் பார்க்கும் முழுமகனை செயலை யொத்திருக்கின்றது மேற்படி நூலாசிரியரின ஆராய்ச்சித் திறன்.

# நாவலன்சீர் பாடும் நன்னாளே நந் நாள்

[ ஆசிரியர் அ. வை. கதிர்காமநாதன் ]

மறந்தேயாயினும் மாநிலத் தெவர்க்கும இன்னுங் கியற்ரு விழுமிய குலத்தில், குன்றன குணனும் நன்றி சேர்திருவும் என்றுமுடைய சிவாநுபூதிமானுய், தகரவார் குழற்மையலார் மையவிற் கட்டுண்டு இன்னிலையிற் சிக்குண்டு வருந்தும் எயபோன்றோர் நிலையை அணுவளவேனும் விரும்பாது, நைஷ்டிக பிரமச்சரிய விரதமபூண்டு முத்தீக்ஷையும் பெற்ற சிவபூஜா துரந்தரராய் வேதாகம சைவசித்தாந்த சாகரமாய் ஞானபாநுவாய் விளங்கி, இறுதிவரை சிவதொண்டும தமிழ்த்தொண்டும் ஆற்றிய ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானின் பெருமை அளவிடற்பாலதன்று. வாக்கிற்கும் அப்பாற்பட்டது.

நாவலர் ஐயா, பிறரை இகழ்தலும், அவாக்கடல படிதலும அழுக்காறுடையையும், பயனல கூறலும, தெய்வ மிகழ்தலும, சிறறினஞ் சேர்தலும், கைதவ வேடமும் என்றின்னோ ரன்ன தீய குணங்கள் சிறிதளவேனும பொருந்தப் பெருத உத்தமன். ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்ருேன். பாழியந்தடந்தோட் படைவலி வேந்தர்க்கும் அஞ்சாது உண்மையையாண்டும நாட்டிய உரவோன். கற்பணியே யன்றிச் சொற்பணி பல செய்த உத்தமோத்தமன், தூய வெண்ணீறு துதைந்த மேனியன்; கண்டிகை துலங்கிய மார்பினன்; பட்டாடை பொருந்திய அரையினன்; தேவாரத் திருமுறை தாங்கிய கரத்தினன், சிவநாமம தவழு நாவினன், குருலிங்க சங்கம பத்திகளிற் சிறந்தோன். இத்தகைய திருக்கோலந்தாங்கிய ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானை மறந்ததனுலன்ருே இன்று இந்நிலைக்கு ஆளாயினோம். தெய்வமே! பண்டிருந்த நிலைமையினை மீண்டுங் காண்பது எந்நாளோ?

தொடர்ச்சி 3-ம் பக்கம்

## நாவலருக்கு நாம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

உருவச்சிலை நாட்ட வேண்டும்.

3. அவருடைய உண்மையான புகைப்படத்தை மூவர்ணப் பொலிவுடன அச்சிட்டுக் குறைந்த விலைக்கு விற்க ஒழுங்குசெய்தல வேண்டும். ஒவ்வொரு தமிழருடைய இல்லத்திலும் அவருடைய திருவுருவப்படமிருக்க வேண்டும்.

4. நாவலர் எழுதிய கடிதங்களைச் சேகரித்து அச்சிட்டு வெளியிடல் வேண்டும்.

5. நாவலர் பெருமான் எழுதிய கடிதங்கள், அவர்பாவித்த பேனு, பென்சில்கள், அவரணிந்திருந்த பட்டுப் பீதாம்பரங்கள, அவரணிந்திருந்த உருத்திராட்சமாலைகள், அவர் பூவெடுத்த பூக்கூடைகள் முதலியவைகளைச் சேகரித்து ஒரு பொதுவானவிடத்தில் பலரும் கண்டு தரிசிக்கக் கூடியதாகச் சேகரித்து வைத்தல.

6. அவருடைய நூல்களை மலிவுப் பதிப்பாக அச்சிட்டு வெளியிடல் வேண்டும்.

7. அவருடைய வாழ்க்கை வரலாறுகளை ஆங்கிலத்திலெழுதி வெளியிடுதல.

8. அவரைப்பற்றி பிரசங்கம் செய்தல். செய்வித்தல் - அவருடைய குருபூசையை எங்கும் சிறப்பாக நடக்க ஒழுங்குசெய்தல்.

9. அவரைப்போலச் சைவத்திற்கும், தமிழுக்கும், தமிழர் பண்பாட்டிற்கும் தன்னலம் கருதாது தொண்டு செய்தல.

10. சைவமும், தமிழும் தமிழர் பண்பாடும் மிகவும் சீர்கெட்ட நிலையிலிருப்பதால இன்னுமொரு நாவலர்பெருமானை அனுப்பி வைக்கும்படி இறைவனை வேண்டுதல.

எனவே இவைகளைச் செய்வதற்கு ஒரு தொண்டர்படையை அமைப்போம். நாவலர் நினைவை என்றும நிலைநிறுத்துவோம்,

## அருட் செல்வன்

எழுதுவது

கொழும்பு விவேகானந்த சபையாரது சமயபாடப்பரீட்சை வினுத்தாள்களைப்பற்றிக் குறிப்பிடுவதாக முந்திய இதழில் எழுதியது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

ஷெ வினுத்தாள்பற்றி ஒரு மாணவன் எழுதியகடிதத்தை இங்கே தர விரும்புகிறேன், அஃது ஒன்றே இவ்வாண்டுப் பரீட்சையின் குறைபாட்டைக்காட்டப்போதுமானது; 'ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறுபோலச் சபையார் அதனை வாசித்துப் பதம்பார்த்துச் சிந்தித்துத் தெளிந்து, அடுத்த ஆண்டு தொடக்கம பரீட்சையைச் செவ்வனே நடத்துவார்களாக.

அருட்செல்வன் அவர்களுக்கு

ஐயா,

... ... ... இவ்வருடம் நடந்த பரீட்சையில் கீழ்ப்பிரிவு II க்கு உரிய வினுத்தாளில 5 வினுக்கள் மாத்திரமேஉள. அவற்றுள் முதல் இரண்டு வினுக்களும் 'புழுவாய்ப் பிறக்கினும்' ஏகநாயகனை' என்னும இரண்டு திருவருட்பாக்களைப்பற்றியது. மூன்ருவது வினு 4 திருக்குறள்களைக் கொண்டது ஐந்தாவது வினு மெய்ப்பொருள்நாயனுரைப்பற்றியது. (நான்காவது வினு 'மாணவர் தரிசித்த கோயிலைப்பற்றியது.) நான்காவது வினுவைத் தவிர ஏனைய 4 வினுவும் எமது பாடநூலிலிருந்து எடுக்கப்பெற்றவை. எமது புத்தகத்திலோ ... ... பாடங்கள் இருக்கின்றன, ... ... ஐயா, 'அந்த நூலில் ஷெ 4 வினுக்களுக்கும உரிய விஷயந்தான் எனக்குத் தெரியாது ஏனையவைகள் எல்லாம் நன்கு தெரியும்' என்று வைத்துக்கொள்ளுங்கள். அங்ஙனமாயின் நான் அவர்களது தேர்விற் சித்தியடையமுடியாதலலவா? எனவே நான் சமயந் தெரியாதவன் என மதிப்பிடப்படுகிறேன்; என்பதும் நான்கு பாடங்கள் தெரிந்து ஏனைய பாடங்கள் அத்தனையும் தெரியாத ஒருவர் சமயந் தெரிந்தவராக மதிக்கப்படுகிருர் என்பதும் இதனுல் உறுதியாகிறது. இதுவா பரீட்சிக்கும் முறை?

ஐயா, தயைசெய்து இதனை ஆராய்ந்து தங்கள் பகுதியில் எழுதி அறியத் தருக.

ஓர் மாணவன்

## இராமநாதனை மனதில் இருத்துவோம்

—0—

— புலவர்: தமிழ்மாறன் —

இலங்கையிற் தோன்றினேன் இன்னல் அகற்றினேன்
கலங்கரை விளக்கமாய்க் கலங்கிருள் துடைத்தோன்
நலம்பல செய்த நம்இராம நாதன்
மலரடி தொழுது மனதில் இருத்துவாம். 1.

சிங்களத் தீவில் சிங்களர் வதைபடப்
பொங்கிச் சென்றேன் பொன்னெனச் சொன்னேன்
தங்காத் துன்பம் தணித்தோன் எங்கள்
மங்கா நாதனை மனதில் இருத்துவாம். 2.

சட்ட சபையில் வெட்டெனச் சொல்லி
மட்டம் தட்டினேன் மாத்துயர் வெட்டினேன்
எட்டாப் புகழை எட்டிப் பிடித்தோன்
நட்டார் தலைவனை நம்மகம் இருத்துவாம். 3

உற்றவர் போற்ற மற்றவர் வாழ்த்த
பொற்பிலாச் சிறுமியர் பொற்புடன் பயில
நற்றமிழ்க் கோவில் நிறுவினேன் எங்கள்
கற்றவர் நாதனைக் கருத்தில் இருத்துவாம். 4.

## மஹா பிரபுத்துவ மஹோளதார்ய சற்குண சம்பன்ன சதாசார சீலன்

—0—

கௌரவ ஸேர். பொன், இராமநாதன் அவர்களை நினைவுறூஉம் இந்நாளில் அன்னார் பற்றிய அரிய சிந்தனைகள்.

1, ஸேர். பொன். இராமநாதன் அவர்கள் ஈழநாடு தந்த இணையிலாத் தமிழ் வீரன்.

2. பூவுலகோர் போற்றுங் காவலர் தலைவன்

3 சட்ட நூல் வரம்பு கண்ட மஹா மேதை.

4. வடகலை தென்கலை கைவந்த புலமையாளன்.

5. அறிஞர் பராவுறூஉஞ் சொற்பெருங் கொண்டல்.

6. தர்க்க சாஸ்திரக்ஞன்.

7. விழுப்பொரு ளுணர்த்தும் விழுமியோன்.

8, சகல சாஸ்திர ப்ரவீணன்,

9. தெண்ணிலா மலர்ந்த வேணியான் பாதகமலங்களை அநவரதமும் தவறாது வந்திப்போன்.

10. தேவார திருவாசக பாராயணப்பிரியன்

11. ஹிதகாரித்துவமும் சிவபக்திச் செல்வமும் நிறைந்த செல்வச் சீமான்.

12. இத்தேய திலாக. பிறதேயங்களிலாக மிகுந்த கண்ணியம் படைத்த நுண்மாணுழைபுலமுடையோன்.

13. ஆடவர் தமக்கும் அணியிழையார் தமக்கும் இரு வித்தியா நிலையங்களை நிறீஇய தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்.

14 அகண்ட பரிபூரணனுகிய இறைவனுக்குக் கற்கோயில் எழுப்பிய ஒப்பிலா ஞானி.

15. பகவத்கீதைக்கு உயர் வியாக்கியானம் செய்து தமிழ்நாடுய்யத் தந்த தகைசால் பெரியோன்.

16. ஞாலத்துழலும் நல்குரவாளர்க்குக் காலங்குறிக்காது வழங்கிய வள்ளல்

— அ. வை. க

### நாவலன்சீர்பாடும்...

2-ம் பக்கத் தொடர்ச்சி

செந்தமிழ் நாட்டிற்கும் சைவத்திரு நாட்டிற்கும் நீங்காப்புகழைஓங்கவைத்த ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானின் பாதகமலங்களை நினைவுறூஉம் இந்நாளே நன்னாளாகும்.

"நேற்றைக்கு உளனெனப்பட்டான் இன்றைக்கு இலன் எனப்படுதலை கண்டும் உன்னுயிர்க்கு உறுதி பயப்பனவற்றைத்தேடாது வீணுட் கழிப்பது ஐயையோ என்ன பேதைமை" நாவலர் சொல்லித் தந்த மந்திரம். ஆகவே நாவலர் பெருமான் காட்டிய வழியில் நின்று ஒழுகுவோமாயின் எல்லாம் சித்திக்கும் சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!! ——

### ஆகம விரோதக் கிரியைகளை நீக்க அயராதுழைத்ததீரன்

"நாவலர்பெருமான் நினைவு தினத்தைக் கொண்டாடுகிறோம்; அவரது தொண்டுகளின் சிறப்புப்பற்றியெல்லாம் அழகாகப் பேசுகின்றோம்; எழுதுகின்றோம். அவர் சொன்னபடி செய்கின்றோமா? ஆலயங்களிலே ஆகமவிரோதக்கிரியை முறைகளையும் நடனசங்கீதம் (சதுர்க்கச்சேரி) வாண விளையாட்டுக் கேளிக்கைகளும் இடம்பெறலாகாது. இக்கோவில்கள் அறிவுபணப்பரப்பும் தெய்வீக இடங்களாக மிளிர வேண்டும்; கோவில்கள் களியாட்டு மைதானங்களாக இருக்கக்கூடாது என்றெல்லாம் நாவலர் பெருமான் வரிக்கு வரி எழுதிச் சென்றாரே! இன்று எத்தனை கோவில்கள் அவர் வழியைப் பின்பற்றுகின்றன......?"

இவ்வாறு நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக்கழக ஆதரவில் நடைபெற்ற நாவலர்தின விழாவில் உரையாற்றிய மகேசுவரிவித்தியாசாலை ஆசிரியர் திரு. அ. செல்லத்துரை அவர்கள் குறிப்பிட்டார்கள்

இவ்விழா நாயன்மார்கட்டு ஸ்ரீ இராச இராசேஸ்வரி அம்பாள் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் யாழ்இந்துக்கல்லூரி தமிழ்வித்தியாசாலை நாவலா நினைவுப பேச்சுப்போட்டியில்முதலிடம்பெற்ற மாணவர்களும்பங்குபற்றிச் சொற்பொழிவாற்றினர்கள். ந—நி

## நாவலர் அம்மானை

— வித்துவான். S. இராமசாமி —

[சிதம்பரம் ஆறுமுகநாவலர் பாடசாலையில் நடைபெற்ற நாவலர்நினைவுவிழாவில் இப்பாடல் இடம்பெற்றது.]

1. நாவலர் தாம் எனத்தாமே நவிலாது பிறர் தம்மால்
நாவலர்என் றழைத்திட்ட நாவலன்யார்? அம்மானை!
நாவலர்என் றழைத்திட்ட நாவலன்நம் ஆறுமுக
நாவலர்தாம் என்றென்றே நவின்றிடுவாய், அம்மானை!
நாமுமவர் புகழ்பாடி ஆடுதுங்காண், அம்மானை!

2. மாறுமுகங் கொண்டெழுந்த மறுசமயம் புக்குழன்றூர்
தேறுமுக மாகவருள் செய்தார்யார்? அம்மானை!
தேறுமுக மாகவருள் செய்தவர்நம் நல்லூரின்
ஆறுமுக நாவலர்என் றறைந்திடுவாய், அம்மானை!
அத்தகையார் புகழ்பாடி ஆடுதுங்காண், அம்மானை!

3. அமிழ்தின்நற் சுவைதேரிவார் அச்சுவையின் இனிதென்னத்
தமிழின்நற் சுவைதேரித்த தமிழன்நம் ஆறுமுக
அமிழ்தென்சொல் நாவலர்என் றறைந்திடுவாய், அம்மானை'
அவர்தம்நற் புகழ்பாடி ஆடுதுங்காண், அம்மானை!

4. நீறுமணி கண்டிகையும் நெறிவழுவாச் சிவத்தொண்டும்
வீறுமணி யாகக்கொள் வித்தகன்யார்? அம்மானை!
வீறுமணி யாகக்கொள் வித்தகனநம் நல்லூரின்
ஆறுமுக நாவலர்என் றறைந்திவோய், அம்மானை!
அப்பெரியார் புகழ்பாடி ஆடுதுங்காண், அம்மானை!

5. பொன்னணியும் புகழ்புவியும் பொற்கொடியும்போன்றனவாம்
எந்நலமும் என்னலமென் றிகந்தார்யார்? அம்மானை
எந்நலமும் என்னலமென் றிகந்தவர்நம் ஆறுமுகன்
என்னுயிர் நாவலர்என் றியம்பிடுவாய், அம்மானை!
என்றுமவர் புகழ்பாடி ஆடுதுங்காண், அம்மானை!

## நாவலர் வாழ்க்கையைப் பின்பற்றுக

"புறச்சமய இருள் நீங்க அவதரித்த ஞானசூரியனே ஆறுமுகநாவலர். அவருடைய வாழ்க்கையைப் பின்பற்றி மாணவர்கள் அவரைப்போலத் தமிழமொழிக்கும் சைவ சமயத்திக்கும தொண்டாற்ற வேணடும"

எனப் பண்டிதர் பிரமஸ்ரீ வ. மு. இரத்தினேசுவர ஐயர் நாவலர் மண்டபத்தில் நடைபெற்ற நாவலர் குருபூசைக் கூட்டத்தில் தலைமைவகித்துப் பேசும் பொழுது உரை நிகழ்த்தினார். பண்டிதர் த. சுப்பிரமணியம் அம்பலவாணநாவலர் இயற்றிய சற்குரு மணிமாலை என்னும் நூலின் வரலாற்றைக் கூறிச் சில செய்யுட்களை இசையுடன் ஓதினர். ஆசிரியர் திரு. அ. துரைரத்தினம் தமிழர் பண்பாடும், சைவாசாரமும் நாவலரால் காப்பாறறப் பெற்றன வெனக் கூறினர். வித்துவான சைவப்புலவர் திரு க. கணபதிப்பிள்ளை நாவலர்மீது நவாலியூர் சோமசுந்தரப்புலவர் பாடிய பாக்களை ஓதி நாவலர்பெருமானைப்பற்றிப் புலவர் கொண்டுள்ள பக்தியையும் மதிப்பையும் விளக்கினர். முதலியார் செ. முத்துத்தம்பி நாவலர் பிறந்த நாட்டில் இக்காலம் சைவாபிமானம் தமிழபிமானம குன்றிவருவதைப் பார்க்க மனம் வருந்துகிறதெனவும், மக்கள் விழித்துத் தங்கள் சமயத்தையும் மொழியையும் காக்க முன்வருதல வேண்டுமெனவும், நாவலர் திருவுருவப்படம ஒவ்வொருவர் இல்லத்திலும் நிறுவப்படுதல் வேண்டுமெனவும் கூறினர். ——

## திருவாளர் கந்தையா அவர்களுக்குப் பாராட்டு

உரும்பராய், நவம்பர் 0

"உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் நீண்ட காலம் தலைமையாசிரியராக இருந்த இடைக்காடு திரு, ஆ. கந்தையா அவர்கள் இந்துக்கலலூரி அதிகார சபையின் கீழ் உள்ள பாடசாலைகள் மூலமாக சைவத்தையும் தமிழையும் வளர்த்த ஓர் பெரியாராவர். அவரிடம் கற்ற மாணவர்கள் பல துறைகளிலும் முன்னேறியிருப்பதைக்கண்டு யான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன் தலைமையாசிரியர் திரு. ஆ. கந்தையா அவர்கள் புகழ் பூத்த ஒரு பெரியாராவர்' என்றிவ்வாறு இந்துக்கல்லூரி அதிகார சபையின் முகாமையாளரும், சைவபரிபாலன சபைத்தலைவரும், பிரபல வியாபாரியுமான திருவாளர் த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள், உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை முன்னாள் தலைமையாசிரியர் இடைக்காடு திரு ஆ. கந்தையா அவர்களது எழுபதாமாண்டுப் பூர்த்தி விழாவுக்குத் தலைமைதாங்கிப் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

உரும்பராய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறற இவ்விழாவுக்கு வந்தவர்களை, விழாச்சபைத்தலைவரும், பிரபல சமூக சேவையாளருமான மலாயன் பென்சனர் திரு. அ. இளையதம்பி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினூர்கள்.

"திருவாளர் ஆ கந்தையா அவர்கள் உண்மையெனும் திண்மை நிரப்பப்பெற்ற ஒரு பெருஞ் சான்றாண்மையாளர். அவருடைய விழா, அவர்கள் தலைமையாசிரியராகக் காலடி எடுத்து வைத்த இடத்தில், சைவபரிபாலன சபைத் தலைவரது தலைமையில் கொண்டாடப்படுவது சாலவும் பொருத்தம்" என்று கூறினர் ஆசிரியர் பஞ்சாட்சரம் அவர்கள். டொலர் கோப்பறேசன் உரிமையாளரும் பழைய மாணவருமான திரு. ஆ. திருஞானசம்பந்தர் அவர்கள் தலைமையாசிரியர் திரு. கந்தையாவுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

விழாச்சபைத்தலைவர் திரு. அ. இளையதம்பி அவர்கள் பொற்கிழி வழங்கினர்.

## பட்டம் வழங்குதல்

25 - 11 - 64-ல் அன்று நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் சைவபரிபாலன சபைத் தலைவர் திரு. த. முத்துச்சாமிப்பிள்ளையவர்கள் தலைமையில் நடைபெற்ற நாவலர் தின சாதனை மகாநாட்டில் இளைப்பாறிய கல்வியதிகாரி திரு சி. உ. சோமசேகரம் அவர்களுக்கு 'சைவ வித்தியாபூஷணம்' என்ற பட்டம் ஷெ மகாநாட்டுச் சைவாதீனத்தால் வழங்கப் பட்டது.

### தெல்லிப்பழை பாலர்ஞானோதய சபை

ஷெ சபையினரால், சமய விஷயப் பேச்சுப் போட்டியொன்று, 17-11-64 செவ்வாய்க்கிழமை, திரு. சு. சிவவாகீசர் B. A. திருமதி சிவானந்தவல்லி கனகநாயகம் ஆகியோரை மத்தியட்சர்களாகக் கொண்டு நடாத்தப்பட்டது. அதன் பெறுபேறுகள் கீழ் வருமாறு:-

மூன்றும் வகுப்பு

1, ம ஞானரதி
2. சி. சிவசோதி
க. கனகதயாபரி
3 கா. சிவகுகன்
க. லோகேஸ்வரி

சித்தி பெற்றவர்
சோ. கார்த்திகை குமாரன்

நான்காம் வகுப்பு

1. க. கனகதயாவதி
2. சொ கணேஸ்வரன்
3. சொ. யோகேஸ்வரி

சித்தி பெற்றவர்கள்
அ. யோகேஸ்வரி
சி தர்மராசு
ந. செல்வவடிவாம்பிகை

[ராணி

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## காக்கைக்கே இரையாக்கிக் கழிக்கிறோம்

"அரிதரிது மானிடராதல் அரிது" இறைவனல் கொடுக்கப்பட்ட இவ்வரிய மானிடப் பிறவியிலே அவனை வணங்காமல் ஆக்கைக்கே இரை தேடி அலமந்து காக்கைக்கே இரையாகிக் கழிக்கிறோமே! என்னே எங்கள் அறியாமை!" இவ்வாறு கார்த்திகை இரண்டாம் சோமவாரத்தன்று நல்லூர் சிவன்கோவிலில் நடைபெற்ற கூட்டத்தில் சைவப் பிரசாரகர் திரு. பொன். அப்புக்குட்டி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். மேலும் மானிடப் பிறவியின் அருமையையும், தெய்வ வழிபாட்டின் அவசியத்தையும் அவர் வற்புறுத்தினர். ——

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மத்தியூஸ் ரோட், யாழ்ப்பாணம்.
குசைப்பிள்ளை சந்தியாப்பிள்ளை
—வழக்காளி
வழக்கு இல. M,B. 5469
எதிராக
17/2, மத்தியூஸ் ரோட்,
யாழ்ப்பாணம்.
1. சின்னத்தம்பி நாகலிங்கம்
2, நாகலிங்கம் பெண் நாகம்மா
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M.B. 5469-ம் இலகக வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக கட்டளைப்படி பின்னுல் விபரிககப்படும் ஒரு துண்டுககாணி 1964-ம் வருடம மாாகழிமாதம் 28-ந்திகதி (28-12-64) திங்கட்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-ரூபா 1460-ம் 7-3-63 தொடக்கம் 12-9-63 வரைக்கும் ரூபா 1000/-க்கு 12 வீத வட்டியும், அதன்பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் பணம் முற்ருக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 215-75 சதமும்.

காணி விபரம்:

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோயிற்பற்று, சுண்டிக்குளி இறை, "குளத்தலவளவும் மாவிலங்கையடியில் வயலும்" நிலப்பரப்பு 7 குளி 10½. உத்தரவு பெற்ற உலாந்தா S. ஏகாம்பரத்தால் தயாரிககப்பட்டு யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு P, 14217-ம் இலகக வழக்கில் அணைக்கப்பட்ட 13-9-1921 திகதியுடைய 783-ம் இலக்கப்படத்தில் துண்டுகள் 3-ம், 4-ம் எனக் காட்டப்பட்டுள்ளது. இதில் மேற்குப் பககத்தால் சிந்தமாக நிலப்பரப்பு 3, வீடும் கிணறும், செய்பயிர் வான்பயிர்களும். எல்லை கிழக்கு ஆறுமுகம் வேதநாயகத்துக்கும் பெண் லூர்த்தம்மாவுக்கு முரிய ஆதனம். வடக்கு ரோட்டு மேற்கு கவுரியல் ஜோனியின் ஆதனம், தெற்கு ஒழுங்கை. இழகெல்லையிலுள்ள காணியிலிருக்கும் குறிக்கப்பட்ட படத்தில் "N" எனக் காட்டப்பட்டுள்ள கிணற்றில் பங்கும் துர்வைப் பங்கும் கையொழுங்கைப் பாவிப்புரிமையுடன் இதடங்கலும். D 268/29-ல் பதியப்பட்டது.

செ. பாண்டித்துரை
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
உததரவுபெற்ற ஏலதாரரும்.
Commissioner of Sales, Valuer
& Licensed Auctoneer.
தபாற்கந்தோரடி,
நவாலி, மானிப்பாய்,
20-11-64.
M. 223 27-11-64.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்,
பிறவுண் ரோட், நம் 66.
1, சாமுவேல் இராசரெத்தினம் ஸ்பென்சரும் பெண்
2. சுகிர்தரெத்தினமும்
—வழக்காளிகள்
இல, M,B. 5260
எதிராக
கொக்குவில் கிழக்கு
கந்தையா குமரய்யா
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 5260-ம் இலகக வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக கட்டளைப்படி, பின்னுல் விபரிககப்படும் ஒருதுண்டுக காணியை, 1965-ம் ஞூ ஜனவரி மீ 9 உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடககம அந்தககாணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 3257/-ம் 4-12-62 தொடக்கம் 12-7-63 வரைக்கும் ரூபாய் 2500/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைககும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 253-65 சதமும்.

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோயிற்பற்று, கொககுவில் கிழக்கு இறை, "கறுவலடி கட்டுப்புலமும் பள்ளர்காடும்" பர. நில, இலா. 10¾. இதில் பரப்பு 7 விற்கப்பட்டபின் பரப்பு 3¾. இப்பரப்பு மூன்றே முககாலும் பரப்பு ஒன்று ஒழுங்கைக்

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மாவிட்டபுரம்
வைரவநாதர் சின்னப்பு
—வழக்காளி
இல, M.B, 5812
எதிராக
மாவிட்டபுரம்
சரவணை நல்லானும்
பெண் வள்ளியும்
- எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 5812-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிககப்படும் ஒருதுண்டுக காணியை, 1964-ம் ஞூ மார்கழிமீ 31 — வியாழககிழமை முற்பகல் 10 மணி தொடககம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 1383/-ம 27-6-1963 தொடக்கம் 23-3-64 வரைக்கும் ரூபாய் 1000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும், இதில் ரூபாய் 640 கொடுபட்டுள்ளது.

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளைக்கோவிற்பற்று மாவிட்டபுரம் இறை, "பைங்கிராப்புளியடி" நிலப்பரப்பு 5½, கிணறும் செய்பயிர்களும், எல்லை கிழக்கும் தெற்கும் பொன்னம்பலம் தம்பையாவின் உரிமைக்காரரினுதனம், மேற்கு கந்தன் முருகனுக்கும் பங்காளருககுமுரிய ஆதனம், வடக்கு கணபதி சிதம்பரனுக்குரிய ஆதனம், இதடங்கலும்.

நீ. அன்ரனிப்பிள்ளை,
கொம்மிஷனர்விலைமதிப்பாளர்
261, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
M 225 9-11-64

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் பெரியகடை
முருகேசு மாணிக்கவாசர்
வழக்காளி.
இல. M B 5017
எதிராக
இலுப்பைக்கடவை
1. தில்லைநாதர் ஆறுமுகமும்பெண்
2. இந்திரையும் தற்பொழுது
சிறுப்பிட்டி புததூர்
-எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 5017 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிககப்படும் ஒருதுண்டுககாணியை 1965 ம் ஞூ தை மீ 9 சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடககம் அந்தககாணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைதொகை: முதல்வட்டி ரூபா 2376-ம் 17-8-62 தொடக்கம் 13-12-62 வரைக்கும் ரூபா 1500 க்கு 12வீத வட்டியும் அதன்பின் முழுத தொகைககும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும்கோட்டுச்செலவு ரூபா 181-90 சதமும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் துணுக்காய் பூநகரிப் பகுதி கல்விளான் இறை "குடத்தறை பறை 9 அலலது 18 மரக்காலும். இதற்கு எல்லை கிழககு மூ.கதிரேசுவின் உரிமைக்காரருககுரிய ஆதனம். வடக்கும் தெற்கும் ஐயம்பிள்ளை விசுசித்தம்பிககுரிய ஆதனம். மேற்கு முடிககுரிய நிலம். இதடங்கலும்,

அ. ஜெகநாதன்,
கொம்மிஷனரும் விலைமதிப்பாளர்
16 A, அம்மன் ரோட்
கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
M 222 27-11-64.

---

காக விடப்பட்டு பரப்பு 2 3/4-ல் இப்பரப்பு 2 3/4-க்கும் எல்லை கிழக்கு கந்தையா செல்வரெத்தினம பெண் யோகம்மாவின் ஆதனம், வடக்கு ரோட்டு, மேற்கு வழிப்பாதை, தெற்கு கந்தையா குமரய்யாவின் ஆதனம். இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும். பதிவு இலக்கம்: D 270/10.

S. இரத்தினசபாபதி,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
ஸ்ரேசன் ரோட்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில், 25-11-64.
M 224 27-11-64.

---

யாழ்ப்பாணம்

# —ஐக்கிய இலாபநிதி—

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாலுல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.

---

இவ்வாரம் 29-11-64 — 5-12-64

# உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

அதிக வேலை, உட்பகைவர்களால் தொந்தரவு, ஊர்திகளால் (வாகனங்களால்) செலவு, புதன் பிற்பகல், வியாழன், வெள்ளி வரை எச்சரிகை.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகினி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

வயிற்றுக் கோளாறு, சுககுறைவு தொழில்களில் தடை, வார இறுதி நாள எச்சரிக்கை,

மிதுனராசி மிருகசீரிடம், 2 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1ம், 2ம் பாதம்.

நல்ல வாரம், தொல்லைகள் நீங்கும், நிலங்களால் நன்மை, குடும்பதில் மகிழ்ச்சியும், நல்ல சூழ்நிலையும்.

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

உறவினரால் துன்பம். சுகம் குறையும், எளிதில் கோபம் உண்டாகும். பண நஷ்டம், குடும்பத்திற் கலகம்.

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

சுகக்குறைவு, நிம்மதிக்குறைவு, எதிர்ப்புகள் உண்டு, பொருள் வரவு.

கன்னிராசி உத்தரம் 2, 3, 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

புகழ்வரும், தொழில்கள் நிறைவேறும், பகைவர்குத்தோல்வி, நிம்மதி இல்லை உறவினரால் துன்பமும, பண நட்டமும் உண்டாகும்.

துலாம், சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

உழைப்பதால் பலன் இல்லை செலவுக்கேற்ற வரவு இல்லை, நண்பர்களால் உதவி, குடும்ப மகிழ்ச்சி.

விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

சுகக்குறைவு, உறவினரால் தொந்தரவு, அதிக வேலை, பலன் குறைவு, பிறர் பழியை ஏற்க நேரும்.

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

பொருள் வரவு, பகைவர்க்குத தோல்வி, நிலஙகளால் நன்மை, ஏவலாளரால் உதவி,

மகரராசி உததராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம், பாதம்

நல்ல வாரம், பகை நீங்கும், பழைய முதலீடுகளால் பயன், உட்பகைவர்களிடம் கவனம்.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி

ஞாயிறு, திங்கள் முற்பகல கவனம், பொருள் வரும், தொழில் வளரும். நிம்மதி நீககும்

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.
1, 2, 3ம் பாதம்

திங்கள் பிற்பகல், செவ்வாய், புதன் எச்சரிக்கை, எஞ்சிய காலம் உகந்தது, பகைவர்கருததோல்வி, புகழ் வரவு, பொது வாழ்வில் வெற்றி.

---

## அஞ்சா நெஞ்சம் ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பெரியார். ஆகவே, அவர் கேட்ட கேள்வியைத் தமிழ் மக்கள் உணர்ந்தால, தம் மூக்கு வந்த இடர் தீரும். தமிழரும் சீரும் சிறப்பும் பெறறு வாழலாம். நாவலர் புகழோங்குக! செந்தமிழால் வைதாரையும் வாழவைககும் முருகப்பெருமானின் ஆரா இன்ப அருள் யாவரையும் தாங்குக!

---

## தெல்லிப்பழை - பாலர் .... ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

### ஐந்தாம் வகுப்பு

1. சி. சிவமணி
2, சொ. யோகேஸ்வரன்
3. தி. தங்கராணி
ம. ஞானரூபி

### ஆரும் வகுப்பு

1. மு கீதாஞ்சலி
2, செ. கமலாம்பிகை
3. வா, கதிர்காமநாதன்
க. கனகதயாளன்

சித்தி பெற்றவர்
ம. ஞானகாந்தி

### ஏழாம் வகுப்பு

1. நா. சிவகுமாரன
2, க தயாளகேசரி
3. தி. சீவரத்தினம்

சித்தி பெற்றவர்கள்
அ. ஸ்ரீஸ்கந்தராசா
செ. ரவீந்திரன்

### எட்டாம் வகுப்பு

1. செ நீலாம்பிகை

### ஒன்பதாம் வகுப்பு

1. தி. நவரத்தினம்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

78, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
N. A, அருளம்பலம் கைம்பெண்
மீனுட்சிப்பிள்ளை
—வழக்காளி.
வழக்கு இல. M.B, 5392
எதிராக
98, முஸ்லிம் கலலூரி வீதி,
யாழ்ப்பாணம்
1. மீருசாகிப் சுல்தான்
அப்துல்காதர்
2. காதர் பெண் மெரியாம்பு
—எதராளிகள்,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M,B. 5392-ம் இலகக வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1964-ம் வருடம் மார்கழிமாதம் 30 ந்திகதி (30-12-64 புதன்கிழமை காலை 10-30 மணி தொடககம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 5683/ம் 7-2-63 தொடக்கம் 11-3-64 வரைக்கும் ரூபா 5000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் பணம் முற்ருக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 317-30 சதமும்.

காணி விபரம்:

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், யாழ்ப்பாணப்பகுதி, வண்ணுர்பண்ணை கோயிற்பற்று, வண்ணுர்பண்ணை இறை "பட்டியட்டபுலம்" குளி 5, 3/16, கிணறும் குடிலையும். எல்லை கிழககு மீராகண்டு மீராசாகிப் பெண் மீரான் நாச்சியாவின் ஆதனம். வடக்கு மொகமது முஸ்தபா பெண் லதீபாவின் ஆதனம், மேற்கு ரோட்டு, தெற்கு மொகமதுவும் பெண் பொன்னி உம்மாவினதும் ஆதனம். D 287/71-ல் பதியப்பட்டது,

செ. பாண்டித்துரை
கொமிஷனர், விலைமதிப்பாளர்,
உததரவுபெற்ற ஏலதாரர்.
Commissioner of Sales, Valuer
& Licensed Auctioneer.
தபாற்கந்தோரடி,
நவாலி, மானிப்பாய்,
23-11-64.
M 220 27-11-64

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வேலணை
1. பலநோக்குக் கூட்டு உறவுச் சங்கம, மட்டுப்படுத்தப்பட்டது —வழக்காளி
இல. M,B 5978
எதிராக
வேலணை கிழக்கு
1. சங்கரப்பிள்ளை தப்பு
2. வேலுப்பிள்ளை சதாசிவம்
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 5978-ம் இலக்க வழக்கில் எனக்குக கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1964ஞூ மார்கழிமீ 26உ (26-12-1964) சனிககிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிககுள நின்று பிரசித்த ஏலததில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்ரூபா 978/- இதில் ரூபா 800/- க்கு 2-9-1963 திகதி தொடக்கம் 11-5-1964 திகதி வரைக்கும் 6 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 204/15,

காணி விபரம்:

1. யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று சரவணை இறை, தலக்கலடைப்பு நிலப்பரப்பு 12 செய்பயிர்களும். எல்லை கிழககு கணபதிப்பிள்ளை அண்ணுமலைக்கும் பங்காளருககுமுரிய ஆதனங்கள், வடககு மாரியன் பெண் சின்னம்மாவுககும் ஐயன் மாரியனுககும் மற்றவர்களுககுமுரிய ஆதனங்களும் ஒழுங்கை முகப்பும், மேற்கு மயிலவாகனம் லிங்கபிள்ளையின உருததாளிகளுக்குரிய ஆதனம், தெற்கு K மயில்வாகனததுக்கும் கணபதிப்பிள்ளை அண்ணுமலைககுமுரிய ஆதனங்கள். பதிவு இலக்கம் C 116/75, இதடங்கலும் விற்கப்படும்,

ந. ஆறுமுகம்,
கொமிசனரும் விலைமதிப்பாளரும்,
சித்தக்கேணி
20-11-1964.
M 221 27-11-64

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணுர்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண் வீதி 2-ம் ஒழுங்கை 2-ம் இலக்கத்தில் வசிக்கும் ஆறுமுகம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 27-11-1964 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org